

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | மார்ச் 23, 2017 | புரட்சி 16 | முழக்கம் 10 | விலை: ரூ.3.00


# கொள்கைத் தோழர் – கோவை ஃபாரூக் உயிரைப் பறித்தது – இஸ்லாமிய அடிப்படைவாதம்

கோவை திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் ஃபாருக், பெரியார் கொள்கையை ஏற்று கடவுள்- மத மறுப்பாளராக வாழ்ந்ததோடு தனது முகநூலிலும் தனது மதத்தின் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக கருத்துகளைப் பதிவிட்டு வந்தார். இறை மறுப்பாளராக இருந்தார் என்ற ஒரே காரணத்துக்காக இஸ்லாமிய அடிப்படைவாத வெறியில் ஊறிப்போன ஒரு கும்பல் அவரை கொடூரமாக வெட்டி கொலை செய்தது.

கடந்த 16ஆம் தேதி இரவு உக்கடம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகே இந்த கொடூர சம்பவம் இரவு 11.15 மணியளவில் நடந்தது. பழைய இரும்புப் பொருள்களை விற்பனை செய்யும் தொழில் செய்து வந்தார் ஃபாரூக். தொழில் தொடர்பாக பேச விரும்புவதாக தனக்கு வந்த தொலைபேசி அழைப்பை ஏற்று, பேசிய நபர் வரச் சொன்ன இடத்துக்கு தனது மோட்டார் பைக்கில் புறப்பட்டார். சுத்திகரிப்பு நிலையம் அருகே பின்னாலிருந்து வந்த ஒரு கும்பல் தாக்கி கொடூரமாக வெட்டிவிட்டு தப்பி ஓடியது. வழியில் சென்றவர்கள் அலறல் சத்தம் கேட்டு உதவிக்கு ஓடிவரும் நிலையிலே பாரூக் உயிரிழந்து விட்டார். மதவெறி கொலைக் கூட்டமும் தப்பி ஓடியது. இது தனிப்பட்ட பிரச்சினையில் நடந்தது அல்ல. கடவுள் மறுப்பாளராக அவர் கருத்துகளை வெளியிட்டு வந்ததால் மதவெறியில் நடந்த கொலை என்று போலீசார் தெரிவித்தனர்.

பாரூக் கொலையுண்ட செய்தியறிந்து கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பதறிப் போனார்கள். கோவை மாநகர கழகத் தோழர்கள் சம்பவம் நடந்த உடனே அந்த இடத்துக்கு விரைந்தனர். நள்ளிரவிலும் விடியற்காலையிலும் செய்திகள் அறிந்து தோழர்கள் அதிர்ச்சியடைந்து கோவைக்கு விரைந்தனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி கோவைக்கு விரைந்தார். அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, சூலூர் பன்னீர்செல்வம், கோவை, ஈரோடு, சேலம் மாவட்ட தோழர்கள் கோவைக்கு விரைந்தனர்.

பிரேத பரிசோதனை முடிந்து உடலை பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் வரை கழகத் தோழர்கள் உடனிருந்தனர். இஸ்லாமியர்கள் நிறைந்து வாழும் உக்கடம் ‘ஹவுசிங் யூனிட்’ பகுதியில்தான் பாரூக் குடியிருந்தார். கடந்த ஆண்டு செம்படம்பர் மாதம் சசிகுமார் என்ற இந்து முன்னணியைச் சார்ந்தவர் தனிப்பட்ட பிரச்சினையில் கொலை செய்யப்பட்டபோது, கோவையில் இஸ்லாமியர்களின் கடைகள், வீடுகளை இந்து முன்னணியினர் சூறையாடி வன்முறைகளை ஏவினர். இதில் எந்த நிகழ்விலும் தொடர்பில்லாத பாரூக்கையும் இஸ்லாமியர்கள் சிலரோடு சேர்த்து காவல்துறை கைது செய்தது. பிறகு அவர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது. நவம்பர் 8ஆம் தேதி சென்னையில் அறிவுரை குழுமத்தின் முன் நேர் நிறுத்தப்பட்டார். பாரூக் சார்பாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவுரை குழுமத்தின்முன் வாதாடினார். பாரூக் இஸ்லாமியராக பிறந்திருந்தாலும் அவர் பெரியாரின் கடவுள்-மத மறுப்புக் கொள்கையோடு திராவிடர் விடுதலைக் கழகத்தில் பணியாற்றியவர். இந்தக் கலவரத்தில் அவருக்கு தொடர்பில்லை. அவர் மதவெறி எதிர்ப்பாளர் என்று உரிய ஆவணங்களை முன் வைத்து கொளத்தூர் மணி வாதாடினார். வாதத்தை ஏற்று அறிவுரைக் குழுமம், பாரூக்கை மற்றும் குண்டர் சட்டத்திலிருந்து விடுவித்தது.

தொடர்ந்து பாரூக் கோவை திராவிடர் விடுதலைக் கழகத்தில் ஆர்வத்துடன் செயல்பட்டு வந்தார். தனது கடவுள், மத மறுப்புக் கொள்கைக்காக வாட்ஸ்அப் குழு ஒன்றை உருவாக்கி கருத்துகளைப் பகிர்ந்தார். அவரது கருத்தைப் பின்பற்றும் இஸ்லாமிய இளைஞர் குழுவும் உருவாகியது. இஸ்லாமிய அடிப்படைவாதம் பேசும் மதவெறியர்கள், இதை வளரவிடாமல் தடுக்க கருத்தை கருத்து ரீதியாக சந்திக்காமல் அவரை கொலை செய்ய திட்டமிட்டு இந்த வெறிச் செயலை செய்து முடித்துள்ளனர்.



**சென்னையில் அறிவுரை குழுமத்திற்கு ஃபாரூக் வந்தபோது**

தமிழ்நாட்டில் பெரியார் இயக்கத்தைச் சார்ந்த ஒருவரை இஸ்லாமிய அடிப்படைவாதம் கொலை செய்தது இதுவே முதல் முறையாகும். இதுவரை 3 இஸ்லாமியர் சரணடைந்துள்ளனர். இது குறித்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘நியூஸ் 18’ தொலைக்காட்சி செய்தியாளரிடம் பேசுகையில்,

“இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பாசிச சிந்தனையில் ஒரு சிலர் இந்த கொலையை செய்துள்ளனர். அதற்காக ஒட்டுமொத்த இஸ்லாமியர்களையும் கழகம் எதிர்க்காது. இஸ்லாமியர்களை எங்கள் நட்பு சக்தியாகவே கருதுகிறோம். தோழர் பாரூக் வாழ்ந்த பகுதி இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் பகுதி. எனவே இந்த கொலையை இந்து அடிப் படைவாதிகள் செய்துவிட்டு பழியை இஸ்லாமியர்கள் மீது போட்டு, பெரியாரியல்வாதிகளுக்கும் இஸ்லாமியர்களுக்கும் பகைமையை உருவாக்குவதே நோக்கமாக இருக்கும் என்றுதான் நாங்கள் நினைத்தோம். ஆனால், இஸ்லாமிய அடிப்படை வாதத்தில் வெறியூட்டப்பட்ட சிலர் இதை செய்திருக்கிறார்கள் என்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். வெளிநாடுகளில் இஸ்லாமிய பயங்கரவாத குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் தங்களை தீவிர இஸ்லாமியர்களாகக் காட்டிக் கொள்ளும் மதவெறி காரணமாக தமிழ்நாட்டில் சில இஸ்லாமிய இளைஞர்களிடையே சகிப்புத் தன்மை குறைந்து, இத்தகைய பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவதாகவே நாம் கருதுகிறோம். தமிழ்நாட்டில் இஸ்லாமிய அமைப்புகள் இதற்கு எதிர்வினையாற்ற வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பு. ‘எதை சாப்பிட வேண்டும்; எப்படி உடுத்த வேண்டும்; எதை வணங்க வேண்டும்’ என்பதை மற்றவர் மீது திணிக்கிறது இந்து பாசிசம். இது எப்படி கண்டனத்துக்குரியதோ அதேபோல் இஸ்லாமியராக பிறந்துவிட்ட ஒருவர், கடவுள் மறுப்பாளராகவோ, மத மறுப்பாளராகவோ செயல்பட அனுமதிக்க முடியாது என்ற இஸ்லாமிய அடிப்படை வாதமும் ஒரு பாசிசமும் தான்” என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூறியுள்ளார்.

## முகநூலில் ஃபாரூக்கின் இறுதிப் பதிவுகள்


Farook Dvk
13 Mar at 23:52

கடவுள் மறுப்பு......
பகுத்தறிவு.......
இதை பேசுவதால்.........
///////////////////////////
நண்பருக்கும்.......
உறவினருக்கும்.....
நான் தொழில் செய்யும்
சக வியாரிகளுக்கும்......நான்...
எதிரியாக தெரிகிறேன்.....!

அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது.....
நான் ...
கடவுளின் எதிரி...
மதத்தின் எதிரி
சாதியின் எதிரி
ஆக மொத்தம் மூடத்தின் எதிரி.........
மனிதம் என்ற மனிதனுக்கு
நான் எதிரியல்ல...!


Farook Dvk
14 Mar at 12:09am

நாத்திகன்......
விவாதம் முடிந்த பிறகு
வேறு நிகழ்வுக்கு
சென்றுவிடுவான்.........
ஆத்திகன்.....
விவாதம் முடிந்தபிறகும்...
நாத்திகன் மீது கோபத்துடன் இருப்பான்.....!

108 | 4 comments 1 share
Like | Comment | Share

## கழகத் தோழர் ஃபாரூக் குடும்பநிதி !

கழகத் தோழர் ஃபாரூக் கடந்த 16.03.2017 அன்று இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். பாரூக் அவர்களுக்கு மனைவி, இரண்டு குழந்தைகள் உள்ள குடும்பம் உள்ளது. பெரிய பொருளாதார பிண்ணனி இல்லாத நிலையிலும்கூட தன் குடும்ப வருமானத்திற்கான உழைப்பின் இடையேயும் சமூகம் குறித்த கவலையோடு சிந்தித்து அதற்காக திராவிடர் விடுதலைக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சமுதாய பணியாற்றியவர்.

தோழர் ஃபாரூக்கின் எதிர்பாராத படுகொலையை அடுத்து அவரின் குடும்பம் சொல்லொணா துயரத்தில் ஆழ்ந்துள்ள இச்சமயத்தில் அவர்களுக்கு ஆறுதலாகவும், துணையாகவும் இருக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும். நம்மால் இயன்ற உதவிகளைச் செய்து தோழர் ஃபாரூக் குடும்பத்தின் துயரத்தில் பங்கெடுத்துக் கொள்வோம். வாய்ப்பு உள்ள தோழர்கள் தங்களால் இயன்ற நிதியை கீழ் உள்ள கழகத்தின் பொருளாளர் துரைசாமி வங்கிக்கணக்கில் செலுத்தியுதவுமாறு வேண்டுகிறோம்.

**K.S.Duraisamy - Savings A/c No : 10235169636.**
**IFSC Code : SBIN0009314. State bank of india,**
**Veerapandi branch, Tirupur - 641605.**
**Contact number : +919994623020.**

# இஸ்லாமிய அமைப்புகள்-இயக்கங்கள்-கடும் கண்டனம்

*ஃபாரூக் படுகொலையைக் கண்டித்து இஸ்லாமிய அமைப்புகள், இயக்கங்கள், தோழர்கள் வெளியிட்ட அறிக்கையிலிருந்து சில பகுதிகள்:*

**கோவை இஸ்லாமிய கூட்டமைப்பு**

கடந்த 16ஆம் தேதி (வியாழக்கிழமை) இரவு கோவை, உக்கடம் பகுதியில் திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த தோழர் பாரூக், சில நபர்களால் கொலை செய்யப்பட்டு இறந்தார். இச்செயலை கோவை மாவட்ட அனைத்து ஜமாஅத்கள் மற்றும் இஸ்லாமிய இயக்கங்களின் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது.

இஸ்லாமிய வழிகாட்டுதலை மீறி யாரேனும் சில முஸ்லிம்கள் இந்தக் கொடூரத்தை செய்திருப்பார் களேயானால் அவர்களை ஒட்டுமொத்த இஸ்லாமிய சமூகமும் வன்மையாக கண்டிக்கிறது. மேலும் இந்த நடவடிக்கை இஸ்லாமிய வழிமுறையும் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறோம். மேலும் குற்றவாளிகளுக்கு சட்டப்படி உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

கோவை மாவட்ட அனைத்து ஜமாஅத்கள் மற்றும் இஸ்லாமிய இயக்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் தோழர் பாரூக் குடும்பத்தினருக்கு இரங்கலை தெரிவிக்கிறோம். இக்கூட்டமைப்பு சார்பில் அனைத்து உண்மை குற்றவாளிகளையும் கைது செய்து உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டும் எனவும், மனித நேயம் காத்திட அனைத்து ஜனநாயக நடவடிக்கை களுக்கும் அனைத்து ஜமாஅத்கள் மற்றும் இஸ்லாமிய இயக்கங்களின் கூட்டமைப்பு முழு ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அதியமான்**
**(ஆதித் தமிழர் பேரவை)**

கருத்தை சந்திக்க திராணியற்ற மதவெறிக் கோழைகளின் மனித நேயமற்ற இக் கொடூரச் செயலால் நிர்கதியாக நிற்கும் அவரது குடும்பத் தாருக்கு என்ன பதில் சொல்லப்போகிறது இந்த மதவெறி!

கோவையில், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் ஃபாரூக் படுகொலை செய்யப்பட்டிக்கும் மனித நேயமற்ற இச்செயல் மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது.

நாடெங்கும் பகுத்தறிவாளர்களும், முற்போக்கு சிந்தனையாளர்களும் குறிவைத்து கொலை செய்யப்படுவது, நாளும் நாளும் அதிகரித்து வரும் நிலையில், தற்போது கோவையில் அதுபோன்ற ஒரு கொடூரக் கொலை நடந்திருப்பது, மிகவும் அதிர்ச்சியாக உள்ளது, இக்கொலையை தான்தான் செய்தேன் என்று ஒரு இசுலாமிய இளைஞரே சரணடைந்திருப்பது மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சமீப காலமாக இசுலாமிய இளைஞர்கள் பலர் தற்போதைய அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு தங்களை அம்பேத்கரிய பெரியாரிய மார்க்சிய சிந்தனைகளுக்கு உட்படுத்தி அந்த அரசியல் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் அமைப்புகளில் தங்களை இணைத்துக்கொண்டு சமூகப்பணி ஆற்றிவருவது, ஆரோக்கியமான அரசியலுக்கு வழிவகுத்து வருகிறது.

அப்படித்தான் தோழர் ஃபாரூக்கும் தன்னை திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைத்துக் கொண்டு கோவைப் பொறுப்பாளராக இருந்து செயல்பட்டு வந்துள்ளார். தோழரின் முழுமையான பெரியாரிய பகுத்தறிவு சிந்தனைகளையும் செயல்பாட்டுகளையும் அதே வழியில் எதிர்கொள்ள முடியாத சில மதவெறியர்கள் இப்படியான அணுகுமுறையை கையில் எடுத்திருப்பது,

நாடெங்கும் நடந்தேறும் பார்ப்பனிய மதவெறி பாசிசத்திற்கு எதிராக ஒன்றிணைந்து செயல்பட்டு வரும் இயக்க வாதிகளுக்கு இப்படி ஒரு சவாலை எதிர் கொள்வது, மிகவும் குழப்ப நிலையை உருவாக்கி உள்ளது, பார்ப்பனிய மதவெறி சாதிவெறி கூட்டு பயங்கரவாதத்திற்கு எதிராக ஒன்றிணைந்து நிற்க வேண்டிய தருணத்தில் இப்படியான ஒரு மதவெறி சம்பவம் ஏற்புடையதாக இல்லை.

**ஆளூர் ஷாநவாஸ்**
**(விடுதலை சிறுத்தைகள்)**

திராவிடர் விடுதலைக் கழக தோழர் பாரூக் கொலை வழக்கில், கோவை போத்தனூரை சேர்ந்த மீரான் குட்டியின் மகன், 31 வயதுள்ள அன்சர் என்பவர் சரணடைந்துள்ளார்.



**தனது குழந்தைகளுடன் ஃபாரூக்**

இதே கொலையை ஆர்.எஸ்.எஸ் சக்திகள் செய்திருந்தால் இன்று என்னென்ன ஆர்ப்பாட்டம் நடந்திருக்குமோ, அதே சினத்தை இதிலும் வெளிப்படுத்துவோருக்குத்தான் மதவெறியைக் கண்டிக்கும் தகுதி உண்டு.

முஸ்லிம் சமூகத்தில் பிறந்த ஒருவன், மைய நீரோட்டக் களத்தில் தம்மை இணைத்துக் கொண்டு, சமத்துவத்துக்காகவும் சமூக நீதிக்காகவும் பயணிப்பதை சகிக்க முடியவில்லை எனில், அந்த சகிப்பின்மையும் அப்பட்டமான மதவெறியே.

திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம் போன்ற சமூகநீதி இயக்கங்களில் செயலாற்றுவது குற்றமெனில், நான் உறுதிபடக் கூறுவேன்; நானும் ஒரு தி.க - தி.வி.க - த.பெ.தி.க காரன்தான்.

தோழர் பாரூக்கை இழந்துவாடும் பெரியாரிய தோழர்களுக்கும், குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கல். அவரை கொடூரப் படுகொலை செய்த வெறியனுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

**கி.வீரமணி**
**(திராவிடர் கழகத் தலைவர்)**

கோவையில் திராவிடர் விடுதலைக் கழகத்தில் பணியாற்றிய கொள்கை வீரர் தோழர் பாரூக் அவர்களை திட்டமிட்டே கொலை செய்திருக்கிறார்கள். இது ஒரு கொடுமையான படுகொலை.

இதற்குக் காரணமான உண்மையான கொலையாளிகள், திட்டமிடப்பட்ட இக்கொலையில் பங்கேற்றவர்கள், தூண்டிய சக்திகள் அனைவரையும் கோவை போலீஸ் அதிகாரிகள் உடனடியாகக் கண்டுபிடித்துத் தக்க தண்டனை வழங்கிடும் வகையில் புலன் விசாரணையும் மற்ற நடவடிக்கை களும் அமைந்திடல் வேண்டும். மதவெறி எந்த ரூபத்தில் வந்தாலும் மதச் சார்பற்ற சக்திகள் ஒன்று திரண்டு கண்டிக்க வேண்டும் - தடுத்திடல் வேண்டும்.

**ஜி. இராமகிருஷ்ணன்**
**(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி)**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி. இராமகிருஷ்ணன் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கை.

கோவையில் திராவிடர் விடுதலை கழகத்தைச் சார்ந்த பாரூக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். சிறுபான்மை மதவெறி அமைப்பின் உறுப்பினர்களால் அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். மாற்றுக் கருத்துக்களை சொல்வதற்கான உரிமை என்பதே ஜனநாயகத்தில் மிக முக்கியமான கூறு. மதச்சார் பின்மையின் ஆதாரமே கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள், கடவுள் நம்பிக்கையற்றவர்கள் யாராக இருப்பினும் அவரவர்களுக்கான உரிமை உத்தரவாதம் செய்யப் படுவதே. திராவிடர் விடுதலை கழகத்தின் கொள்கைகளில் ஒருவர் உடன்படாமல் இருக்கலாம். அதை எதிர்த்து பிரச்சாரம் செய்வதற்கான உரிமை உண்டு. ஆனால் அந்த கொள்கையை பிரச்சாரம் செய்தார் என்ற காரணத்திற்காக இந்த படுகொலை நிகழ்த்தப்பட்டிருப்பது கடுமையான கண்டனத்திற் குரியது.

**தொல்.திருமாவளவன்**
**(தலைவர் வி.சி.)**

கோவையில், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் ஃபாரூக் படுகொலை செய்யப்பட்டிருப்பது மிகுந்த வேதனையை அளிக்கிறது. அண்மைக்காலமாக, நாடு முழுவதும் பகுத்தறிவாளர்களும் முற்போக்கு சிந்தனை யாளர்களும் குறிவைக்கப்பட்டு கொல்லப்பட்டு வருகின்றனர். தற்போது, தமிழகத்திலும் அதுபோன்ற கொடூரமான படுகொலை அரங்கேறியிருப்பது கடுமையான அதிர்ச்சியை அளிக்கிறது.

இக்கொலை வழக்கில் அன்சர் எனும் ஒரு இசுலாமிய இளைஞரே சரணடைந்திருப்பது மேலும் அதிர்ச்சியளிக்கிறது.

தற்போதைய அரசியல் சூழலில் முஸ்லிம் இளைஞர்கள் ஏராளமானோர், இசுலாமிய அரசியல் வரம்புகளைத் தாண்டி, மைய நீரோட்டக் களத்தில் இணைந்து களமாடி வருகின்றனர். குறிப்பாக, சமூக நீதிக் கருத்தியலின் அடிப்படையில் பெரியாரிய, அம்பேத்கரிய இயக்கங்களிலும் பொதுவுடைமை அமைப்புகளிலும் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

அவ்வாறு, திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்து, கோவை மாவட்டப் பொறுப்பாளராகச் செயலாற்றிவந்த ஒருவர்தான் தம்பி ஃபாரூக். அவரைத் திட்டமிட்டுப் படுகொலை செய்திருப்பதை விடுதலைச் சிறுத்தைகள் வன்மையாகக் கண்டிக்கிறது.

கருத்து மாறுபாடுகளையும் முரண்பாடுகளையும் சனநாயக நெறிப்படியே எதிர் கொள்ளவேண்டும். விமர்சிப்பது, கண்டிப்பது, எச்சரிப்பது, மக்களிடையே அடையாளப்படுத்துவது போன்ற எதிர்வினைகளையும் சனநாயகமுறையில் ஆற்றலாம். ஆனால், அவ் வாறின்றி, இத்தகைய கொடூரமானப் படுகொலை களைச் செய்வது மானுட நாகரிகத்திற்கு முரணான தாகும்.

**திருமுருகன் காந்தி (மே 17 இயக்கம்)**

தோழர் ஃபாரூக்கின் இரண்டு சிறு குழந்தை களுக்கும் என்ன பதில் சொல்லப் போகிறார் உன் ‘உன்னத கடவுள்’?

அந்தக் குழந்தைகளின் தகப்பனை காக்க வராத கடவுளா இந்த மனித சமூகத்தை காக்கப் போகிறார்?

இரு குழந்தைகளின் தகப்பனை கொல்லாதே என்று அறிவுரை சொல்லாத கடவுளை எப்படி கடவுள் என்று சொல்வீர்கள்?

அக்குழந்தைகளுக்கு கதை சொல்லவும், கைபிடித்து பள்ளி அழைத்து செல்லவும், சோறூட்டவும், செல்லமாய் கொஞ்சி விளையாடவும் செய்யும் தகப்பனை கொலை செய்யும் மிருக சிந்தனையை ’குற்றம்’ என்று சொல்லவில்லையா உன் கடவுள்?

மதவெறியை எதிர்த்த எங்கள் போராட்டம் என்பது அனைத்து மதவெறிக்குமானது. ஆர்.எஸ்.எஸ்சின் மதவெறிக்கும்- இதற்கும் என்ன வேறுபாடு.

கடவுள் உண்டு என்றவன் மசூதியை உடைத்தான். கடவுள் இல்லையென்றவன் உடைத்த மசூதிக்காய் குரல் கொடுத்தான்.

கடவுள் உண்டு என்றவன் சகமனிதனை கோவிலுக்கு வெளியே நிறுத்தினான். கடவுள் இல்லையென்றவன் கோவிலில் அனைவருக்கும் கும்பிடும் உரிமைக்காய் போராடினான்.

கடவுள் மறுத்தவன் மனிதனின் விடுதலைக்கு எதிரானவர்களை எதிர்த்துப் போராடினான்.

ஈழத்தில் தமிழனை காக்க கடவுள் வரவில்லை. குஜராத்தில் இசுலாமியனை காக்க கடவுள் வரவில்லை. திபெத்திய பௌத்தனை காக்க கடவுள் வரவில்லை. ஈராக்கில் யெஜீதியை காக்க கடவுள் வரவில்லை. பாலஸ்தீனில், காசுமீரில் அந்த மக்களைக் காக்க கடவுளை காணவில்லை.

இந்துத்துவ மதவெறியிடமிருந்து விடுதலை பெறும் வழிமுறை முற்போக்கு கருத்தியலில் மட்டுமே உண்டு. இந்துத்துவ மதவெறிக்கான மாற்று இசுலாமிய மதவெறியல்ல.

மதம் அதிகாரத்தை ஆக்கிரமிக்கும் பொழு தெல்லாம் வெறியாட்டங்கள் நடந்தே இருக்கின்றன. இதில் இந்து, முஸ்லீம், கிருத்துவம், பௌத்தம், யூதம் என்கிற வேறுபாடுகள் உலகில் இல்லை. இந்த மதங்கள் பெரும்பான்மை கொண்டு நின்ற இடங்களிலெல்லாம் மக்களை பலியிட்டிருக்கின்றன.

(4ஆம் பக்கம்)

# ஆர்.எஸ்.எஸ். ஆணையை ஏற்று குண்டு வைத்தோம்: அசீமானந்தா ஒப்புதல்

இராஜஸ்தான் மாநிலம் அஜ்மீர் தர்காவில் ரம்சான் தொழுகையில் 5000 இஸ்லாமியர்கள் ஈடுபட்டிருந்த போது குண்டு வெடித்தது. இதில் 3 பேர் இறந்தனர் 17 பேர் படுகாயமடைந்தனர். வழக்கம்போல் இதில் இஸ்லாமியர்களே குற்றவாளி என்று கைது செய்தனர். தீவிர விசாரணைக்குப் பிறகு குண்டு வைத்தது இந்து தீவிரவாதிகள், ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் என்பது கண்டறியப்பட்டது. தேசிய புலனாய்வு நிறுவனம் இந்த வழக்கை விசாரித்தது. சிறப்பு நீதிமன்றம் வழக்கில் முக்கிய குற்றவாளியான முன்னாள் ஆர்.எஸ்.எஸ்.காரர், அசீமானந்தாவை விடுதலை செய்து விட்டு 3 பேரை மட்டும் குற்றவாளி என்று கூறியிருக்கிறது. அசீமானந்தா டெல்லி உயர்நீதி மன்றத்தில் பல தாக்குதல்களை நானே திட்டமிட்டேன் என்று ஒப்புதல் வாக்குமூலமே தந்திருந்தார்.

‘காரவான்’ ஆங்கில இதழுக்காக லீனா கீதா ரெங்கநாத் எனும் செய்தியாளர் தனது குழுவினருடன் அம்பாலா சிறையில் அசீமானந்தாவை பேட்டி கண்டார். 2013ஆம் ஆண்டு நான்கு முறை சந்தித்து, 9 மணி நேரம் 26 நிமிடம் பதிவு செய்தார். தனது பயங்கரவாத செயல்களை வெளிப்படையாக அவர் ஒப்புக் கொண்டதோடு இதற்கு ஆர்.எஸ்.எஸ்.சின் முழு ஆசீர்வாதமும் உண்டு என்று அவர் கூறினார். டெல்லி மாநகர் நீதிமன்றத்திலும் இதேபோல் ஒப்புதல் வாக்குமூலம் தந்த பிறகும் இப்போது டெல்லி சிறப்பு நீதிமன்றம் அவரை நிரபராதி என்றும் அவருக்கு எதிராக போதுமான சாட்சியங்கள் இல்லை என்றும் விடுதலை செய்துவிட்டது. ‘காரவன்’ ஏட்டில் அவரது பேட்டி வெளி வந்தவுடன், வழக்கம்போல் ஆர்.எஸ்.எஸ்.சும், பா.ஜ.க.வும் இவை உண்மைக்கு மாறானவை என மறுத்தன. அதைத் தொடர்ந்து அவரது பேட்டியின் ஒலி நாடா இணையத்தில் ஒலிப்பதிவாக வெளியிடப்பட்டது. இப்போதும் http/www.caravanmagazin.in/swamiassemanda-inter-views என்ற தளத்தில் அதை கேட்கலாம்.

நரேந்திர மோடியின் முழுமையான ஆதரவு பெற்றவர் அசீமானந்தா. அவர் இப்போது வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் அவரின் ஒப்புதல் வாக்குமூலத்தை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ முழுமையாக வெளியிடுகிறது. அதிர்ச்சி யூட்டும் தகவல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.
(சென்ற இதழ் தொடர்ச்சி)

அசீமானந்தா 2011 மார்ச் 28 அன்றுதான் தனக்கு வழக்கறிஞர் வைத்துக் கொள்ள ஒப்புக் கொண்டார். அடுத்த நாள் அவர் தன் ஒப்புதல் வாக்குமூலங்களை மறுத்தார். அவையெல்லாம் தன்னை சித்ரவதை செய்து பெறப்பட்டவை என்றார். அவர் விசாரணை மன்றத்தில் கொடுத்த மனுவில் சொன்னதாவது: “அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் என்று சொல்லப்படுபவை ஊடகங்களுக்குக் கசிய விட்டிருப்பது அதிர்ச்சி தருகிறது. அவை வேண்டுமென்றே இந்த வழக்கை அரசியல்படுத்தவும், ஊடகம் வழியாகவே விசாரணை நடத்தி, உலகளவில் இந்து பயங்கரவாதம் என்று ஒன்று இருப்பதாக மிகைப் படுத்திக் காட்டி நிறுவுவதற்காகவும் ஆளுங்கட்சியின் இலாபத்துக்காக செய்யப்பட் டிருக்கின்றன.” அசீமானந்தாவும் சம்ஜௌத்தா வழக்கில் ஆஜராகும் பல வழக்கறிஞர்களும் என்னிடம் அவர்களெல்லாரும் ஆர்.எஸ்.எஸ். சின் உறுப்பினர்கள் என்பதை தெரிவித்தார்கள். ஆர்.எஸ்.எஸ்.சின் சட்டப்பிரிவான அகில் பாரதியா அதிவக்த பரிஷத்தின் கூட்டங்களில் இந்த வழக்கை எப்படி நடத்துவது என்று தாங்கள் முடிவுகள் எடுத்து வருவதாக தெரிவித்தனர்.

நான் அசீமானந்தாவை பேட்டி கண்டபோது அவர் தான் சித்திரவதை செய்யப்பட்டதாக சொல்வதையும், தன் ஒப்புதல் வாக்குமூலங்கள் கட்டாயப்படுத்திப் பெறப்பட்டவை என்பதையும் மறுத்தார். குண்டு வெடிப்புக்காக தன்னை சி.பி.ஐ. கைது செய்தபோதுதான் “இதையெல்லாம் சொல்ல நல்ல நேரம் வந்துவிட்டது. இதற்காக என்னை தூக்கில் போடலாம். அதனாலென்ன, எப்படியும் எனக்கு வயதாகிவிட்டது” என்று முடிவெடுத்ததாக சொன்னார்.

அவரோடு நான் நடத்திய உரையாடல்களில், அசீமானந்தா தான் ஈடுபட்ட இந்த சதியின் விவரங்களை மேலும் மேலும் விரிவாகவே தெரிவித்தார். அவருடன் என்னுடைய மூன்றாவது, நான்காவது சந்திப்புகளின்போது, அவர் இந்த பயங்கரவாத செயல்கள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ்.சின் உச்சமான தலைமையின் ஒப்புதலுடன் நடந்தவை என்று கூறினார். அப்போது சங்கத்தின் செயலாளராகவும் இப்போது தலைவராகவும் இருக்கும் மோகன் பகவத் மட்டத்தில் இந்த ஒப்புதல் தரப்பட்டது. “இது நடப்பது மிக முக்கியம். ஆனால் இதில் சங்கம் (ஆர்.எஸ்.எஸ்.) சம்பந்தப்படாமல் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்” என்று பகவத் தன்னிடம் சொன்னதாக அசீமானந்தா இந்த வன்முறையைப் பற்றி என்னிடம் கூறினார்.

ஜூலை 2005இல் நடந்த ஒரு கூட்டம் பற்றி அசீமானந்தா



**ஒப்புதல் வாக்கு மூலத்துக்குப் பிறகும் விடுதலையான பயங்கரவாதியின் கதை**

**அசீமானந்தாவுக்கு ஒரு இலட்ச ரூபாய் விருது கோல்வால்கர் நூற்றாண்டையொட்டி வழங்கப்பட்டது**

எனக்கு சொன்னார். சூரத்தில் நடந்த ஆர்.எஸ்.எஸ். சந்திப்புக்குப் பின்னர், பகவத்தும் தற்போது அமைப்பின் சக்தி வாய்ந்த ஏழு உறுப்பினர் தேசிய செயற்குழுவில் உறுப்பினராக இருக்கும் இந்திரேஷ் குமாரும், இரண்டு மணி நேரம் பயணம் செய்து குஜராத்தில் அசீமானந்தா வசித்துக் கொண்டிருந்த டாங்க்ஸ் பகுதி கோவிலுக்கு வந்தார்கள். கோவிலிலிருந்து சில கிலோ மீட்டர் தொலைவில் ஆற்றங்கரையில் இருந்த ஒரு கூடாரத்தில் அவர்கள் அசீமானந்தாவையும் அவர் கூட்டாளிகளில் ஜோஷியையும் சந்தித்துப் பேசினார்கள். திட்டத்தை இரு ஆர்.எஸ்.எஸ். தலைவர்களும் அங்கீகரித்தார்கள். பகவத், “நீங்கள் இதை செய்ய வேண்டும்” என்றார். இந்திரேஷ், “இதை சுனிலுடன் சேர்ந்து செய்யுங்கள். நாங்கள் நேரடியாக சம்பந்தப்பட மாட்டோம். ஆனால் இதைச் செய்வதில், இதில் நாங்களும் உங்களுடன்தான் இருக்கிறோம்” என்றார்.

“சுவாமிஜி, நீங்கள் இதைச் செய்வதால் எங்களுக்கு எந்த கஷ்டமும் இல்லை. எதுவும் தப்பாக நடக்காது. இதை கிரிமினல் குற்றமாக யாரும் ஆக்க முடியாது. நீங்கள் இதைச் செய்தால், மக்கள் யாரும் ஒரு குற்றத்தை நாம் செய்ததாக சொல்லப் போவதில்லை. அது நம் சித்தாந்தத்துடன் பொருந்தியதாகவே பார்க்கப்படும். இது ஹிந்துக்களுக்கு மிகவும் முக்கியம். தயவுசெய்து செய்யுங்கள். நிச்சயமாக, எங்கள் ஆசிகள் உண்டு. எங்கள் ஆசிகள் உண்டு” என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் தன்னிடம் சொன்னதாக அசீமானந்தா தெரிவித்தார்.

விசாரணை அமைப்புகள் பதிவு செய்த குற்றப் பத்திரிகைகளில் குமார் சதிகாரர்களுக்கு தார்மீக ஆதரவும் நடைமுறையில் பொருள் ரீதியான ஆதரவும் அளித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால், பகவத் போன்ற மூத்த ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் யார் பெயரும் அதில் சம்பந்தப்படுத்தப்படவில்லை. குமாரை ஒரு முறை சி.பி.ஐ. விசாரித்தது. பின்னர் தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணையை தொடர்ந்தபோது, அசீமானந்தா, பிரக்யா சிங் மட்டத்துக்கு அடுத்த மட்டத்தில் இருப்பவர்களின் சதித் தொடர்பு பற்றி விசாரணையை எடுத்து செல்லவில்லை. (இந்தச் சதித் திட்டத்தில் குண்டுகள் தயாரித்து வைத்தவர்கள் உட்பட சம்பந்தப்பட்ட பலருடனும் தொடர்புகள் ஏற்படுத்தி அனைவருக்குமான இணைப்பு இழையாக செயல்பட்டதாக கருதப்படும் ஜோஷி 2007 டிசம்பரில் மர்மமான முறையில் கொல்லப்பட்டார்)

இந்திரேஷ் குமாருக்கு இந்த தாக்குதல்களில் தொடர்பு இருப்பதாக குற்றச்சாட்டுகள் 2010இல் எழத் தொடங்கியதுமே ஆர்.எஸ்.எஸ். அவருக்கு கேடயமாக இயங்கத் தொடங்கியது. ஆர்.எஸ்.எஸ்.சின் தலைவரான சர்சங்சாலக் எவரும் இதுவரை செய்திராத விதத்தில், பகவத் நேரடியாகவே குமார் மீதான குற்றச்சாட்டுகளை கண்டிக்கும் தர்ணாவில் ஈடுபட்டார். பாரதிய ஜனதாவும் குமாருக்கு ஆதரவாகப் பேசியது. அதன் தேசிய பேச்சாளர் மீனாட்சி லேக்கிதான் குற்றப்பத்திரிகையில் குமாரின் பெயர் குறிப்பிடப்பட்டபோது குமாரின் வழக்கறிஞராகவே இருந்தார். குற்றவாளிகளின் வழக்கறிஞர்களில் ஒருவர் என்னிடம் பேசும்போது, குமார் மிகுந்த அபிலாஷைகள் உடையவர் என்றும் அடுத்த சர்சங்சாலக் ஆவதற்குக் (ஆர்.எஸ்.எஸ் தலைவராவதற்கு) காத்திருப்பவர் என்றும் சொன்னார்.

பெயர் வெளியிட விரும்பாத, விசாரணை அதிகாரி ஒருவர் மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்ட ஒரு இரகசிய அறிக்கையைப் பார்வையிடுவதற்கு என்னை அனுமதித்தார். இதுவரை உள்ள சாட்சியங்களின் அடிப்படையில் ஏன் ஆர்.எஸ்.எஸ்.சை தடை செய்யக் கூடாது என்று விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பும்படி அமைச்சகத்துக்கு இந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது. ஆனால் இதுவரை இந்தப் பரிந்துரை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எப்போது வேண்டுமானாலும் தடை செய்யப்படுவோம் என்ற பயம் ஆர்.எஸ்.எஸ். தலைமைக்கு இருக்கத்தான் செய்கிறது. 1948இல் காந்தி கொலை செய்யப்பட்ட பின்னர் சிறது காலமும் பின்னர் 1975இல் நெருக்கடி நிலைபோது சிறிது காலமும், அடுத்து 1992இல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின்னர் சிறிது காலமும் ஆர்.எஸ்.எஸ். மீது தடை விதிக்கப்பட் டிருக்கிறது. எப்போதெல்லாம் அதன் உறுப்பினர் யாரேனும் பயங்கரவாத செயல்கள் செய்திருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்தாலும், ஆர்.எஸ்.எஸ். கோட்சே விஷயத்தில் பின் பற்றிய அதே உத்தியைக் கையாளுகிறது. குற்றம்சாட்டப் பட்டவர்களைத் தங்கள் ஆள் என்று ஏற்பதோ மறுப்பதோ எதையும் செய்யத் தேவையில்லை என்பது ஆர்.எஸ்.எஸ். நிலை. ஏனென்றால், அவர்கள் முன்பே சங்கத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்றோ, சங்கத்துக்கு சம்பந்த மில்லாமல் சுதந்திரமாக இயங்கினார்கள் என்றோ, அல்லது வன்முறையைக் கைகொண்டதால் சங்கத்திடமிருந்து தாமே அந்நியமாகி விட்டார்கள் என்றோ சொல்லிக் கொள்ளலாமல்லவா.

இந்த விஷயத்தில் அசீமானந்தா ஆர்.எஸ்.எஸ்.க்கு இப்போது ஒரு பெரும் தலைவலி. வனவாசி கல்யாண் ஆசிரமம் 1952இல் தொடங்கப்பட்டது முதல் இன்று வரை ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவாரத்தின் மைய சக்திகளில் ஒன்றாக இருக்கிறது. அசீமானந்தா தன் இளமைக்காலம் முதல் முதுமை வரை தன் வாழ்க்கை முழுவதையும் அதற்கே அர்ப்பணித்திருக்கிறார். தாக்குதல்களை திட்டமிட்ட சமயத்தில் அவர் அந்த அமைப்பின் மதப் பிரிவில் அவருக்கென்றே உருவாக்கப்பட்ட தேசியத் தலைவர் பதவியில் இருந்தார். பயங்கரவாத சதிச் செயலுக்கு முன்னதாகக் கூட, மதக் கலவரங்கள் உட்பட திட்டமிட்ட வன்முறைகளை நடத்துவது அவருடைய வழிமுறைகளில் ஒன்றாக இருந்தது.

பகவத்துக்கும் குமாருக்கும் இந்த சதி திட்டங்களில் அசீமானந்தாவின் பங்களிப்புப் பற்றி 2005மத்தியிலேயே தெரியும். ஆனாலும், அவர் ஒன்றும் வெளியேற்றப்பட வில்லை. நேர் எதிராக மேலும் அரவணைக்கப்பட்டார். **ஆர்.எஸ்.எஸ்.சின் வார இதழான ஆர்கனைசரில் வெளியான செய்தியின்படி 2005 டிசம்பரில் அசீமானந்தாவுக்கு ஒரு இலட்ச ரூபாய் விருது, ஆர்.எஸ்.எஸ்.சில் மிக அதிகமாகப் போற்றப்படும். இதன் இரண்டாவது தலைவராயிருந்த கோல் வால்கர் நூற்றாண்டையொட்டி வழங்கப்பட்டிருக் கிறது.** விருது வழங்கு விழாவில் சிறப்புரை ஆற்றியவர் பாரதிய ஜனதாவின் முன்னாள் தலைவர் முரளி மனோகர் ஜோஷி. தன் மீதான குற்றச்சாட்டுகளிலிருந்து குமார் தன்னை முழுக்க முழுக்கக் கேடயமிட்டுக் காப்பாற்றிக் கொண்டாலும், அசீமானந்தாவுக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் இருக்கும் தொப்புள் கொடி உறவை மறுப்பது ஆர்.எஸ்.எஸ்.க்குக் கடினமாகும்.

ஹிந்து மத சீர்திருத்தவாதியான சுவாமி அக்னிவேஷ் கடந்த பத்தாண்டுகளாக ஆர்.எஸ்.எஸ்.சின் உறுப்பினர்கள் செய்து வரும் பயங்கரவாதச் செயல்களைக் கண்டித்து என்னிடம் பேசும்போது அந்த செயல்கள் “அவர்களையும் ஹிந்து சமுதாயத்தையும் பாதிக்கும்” என்றார். ஹிந்துத்துவா குறித்து மூன்று நூல்கள் எழுதியிருக்கும் அரசியல் அறிஞர் ஜோதிர்மய சர்மா, “ஆர்.எஸ்.எஸ். நேரடியான, இரகசியமான செயல்கள் இரண்டிலும் ஈடுபடுகிறது. ஆனால் அது சிவாஜியின் குருநாதரான இராமதாஸ் உபதேசித்த கொரில்லா தாக்குதல் முறையான, மறைந்திருந்து அடித்துவிட்டு தப்பி ஓடும் உத்தியையே பெரிதும் நம்புகிறது. ஹிந்து மதத்தின் பெயரால் செய்யப்படும் இப்படிப்பட்ட பயங்கரவாத செயல்களைக் கடுமையாக எதிர்க்கத் தேவையான பரந்த மனக் கொள்கையுடைய அமைப்புகள் அரசியல் கட்சிகள் முதல் வலுவான ஊடகங்கள் வரை நம்மிடம் இல்லை என்பதுதான் பிரச்சினை” என்கிறார்.

இப்படிப்பட்ட விமர்சனங்களையெல்லாம் மீறி 1948இல் பெற்ற கெட்ட பெயரையும் கடந்து ஆர்.எஸ்.எஸ். நெடுந்தூரம் வந்துவிட்டது. மனிதர்களையும் நாட்டையும் கட்டியமைப் பதற்கான தன் முயற்சிகளின் வழியே, ஆர்.எஸ்.எஸ்.சின் பல்வேறு அவதாரங்கள், பி.ஜே.பி. உட்பட, இன்று இந்திய சமூகத்தின் பிரதான அரசியல் களத்தில் முக்கிய அரசியல் போக்காகத் தங்களை வடிவமைத்துக் கொண்டிருக் கின்றன. அசீமானந்தாவும் இத்தகைய முயற்சிகளால் வளர்ந்தவர்தான். அவருக்கும் ஆர்.எஸ்.எஸ்.சின் நோக்கங்களே இலட்சியமாகும். கொஞ்சம் பிரமாண்ட மாக்கப்பட்ட இலட்சியம் அது. வருங்காலத்தில் உலகளாவிய ஹிந்து ராஷ்டிரம் அமைப்பதே அவரது இலட்சியம்.

(தொடரும்)

**நன்றி: ‘நரேந்திர மோடி ஆதரவு பெற்ற ஒரு காவி பயங்கரவாதியின் ஒப்புதல் வாக்கு மூலம்’ நூலிலிருந்து (தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டவர்கள் ஞாநி, நரேன் ராஜகோபாலன்)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுகிறவன், நாத்திகன்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்.எஸ்.எஸ், ஐ.எஸ்.ஐ.எஸ், பொது பலசேனா, வெள்ளை ஏகாதிபத்தியம், ஜியோனிசம் என எல்லாமும் மக்களை கொன்று குவித்திருக்கின்றன.

இந்து என்று சொல்லிக்கொள்ளும் தலித்துக்கும், சூத்திர சாதிக்கும் கோவிலுக்குள் பூசை செய்ய அனுமதி கிடையாது. ஆனால் இந்த சாதிகள் ஆர்.எஸ்.எஸ்ஸினை வளர்ப்பதில் வெட்கப்படுவதும் இல்லை. சக மதத்தவனையே மனிதனாக நடத்தாத இந்த மத நம்பிக்கைகள் தான் மனிதனை மிருகமாகவே மாற்றி இருக்கின்றன. கடவுளின் பெயரில் நடக்கும் இக்கொடுமைகளை கடவுளும் கண் திறந்து கண்டித்தது இல்லை.

கருப்பு சட்டை தான் இந்துத்துவ மதவெறியிடமிருந்தும், பௌத்த இன வெறியிடமிருந்தும், இசுலாமிய மத வெறியிடமிருந்தும் சாமானிய மக்களை காப்பவன்.

தோழர் ஃபாருக் கடவுள்களையும் விட உயர்வானவன் புனிதமானவன். உலகின் அனைத்து கொடுமைகளுக்கும் எதிராக நிற்க முடிந்தவனை விட வலிமையான கடவுள் உலகில் இல்லை.

கடவுள் இல்லையென்று சொல்வதற்கு ஒரு நேர்மை வேண்டும், அநீதியை எதிர்க்கும் மனம் வேண்டும். அது ஃபாருக்கிற்கு வாய்த்திருக்கிறது.

தோழர். ஃபாரூக்கை எது கொலை செய்ததோ, அந்த பாசிசத்திற்கு எதிராய் உரக்கச் சொல்கிறோம்,

“கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை”

மதவெறிக்கு எதிரான நம் போராட்டம் ஃபாரூக்கின் மரணத்தால் நின்றுவிடாது. தோழர் ஃபாரூக்கின் கொலைகாரர்களை எந்த மதத்தாலும் எளிதில் உருவாக்கிவிட முடியும்.. ஆனால், தோழர்,ஃபாரூக் போன்ற ஒருவரை எந்த மதப்பிரசங்கத்தாலும் உருவாக்கி விட முடியாது.

யார் வேண்டுமானாலும் மதப் பற்றாளனாய் மாறிவிட முடியும். ஆனால் பகுத்தறிவாளானாய் மாறுவது அவ்வளவு எளிதல்ல. அனைத்து அநீதிகளுக்கு எதிராகவும், அனைத்து ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், அனைவரையும் சுயமரியாதையுடனும், சுதந்திரத்துடனும் நடத்தும் மனதினை கொண்டவனே பகுத்தறிவாளனாய் மிளிர்கிறான். அப்படியான ஒருவனாக தோழர் பாரூக் இச்சமூகத்தில் நிமிர்ந்து நின்றார்.

**சீனி. விடுதலை அரசு**
**(த.பெ.தி.க.)**

இது எங்கள் வீட்டு இழவு. குடும்ப உறவுகளைவிட கொள்கை உறவுகளை அதிகமாக நேசிப்பவர்கள் நாங்கள்! எங்கள் தோழர்கள் அழுகிறார்கள், புலம்புகிறார்கள், அரற்றுகிறார்கள், அவரோடு பழகி பாசத்தை பகிர்ந்து



**ஃபாரூக்கின் மகள்**

கொண்டவர்கள் ஆற்றாமையால் ஒப்பாரி வைத்து கதறுகிறார்கள்! அவர்களை அரவணைத்து இரங்கலைத் தெரிவித்து, ஆறுதல் மொழிகூறும் தோள்களை பற்றிக் கொண்டு நிம்மதி தேடுகிறார்கள்.

ஆனால்... துக்க வீட்டின் கிட்டே வராமல் தூரமாக நின்றுகொண்டு, அழுகுரலின் சத்தம் அமைதிக்கு இடையூறாக இருக்கிறது என்பதும், ஒப்பாரியின் வேகம் குறைவு என்பதும், வேறுவிதமாக ஒப்பாரி வைத்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்பதும், நாங்கள் சொல்கிறபடி ஒப்பாரி வையுங்கள் என்பதும் அநாகரீகமானது... அசிங்கமானது... அருவறுக்கத்தக்கது...

நாங்கள் எளிதில் உணர்ச்சி வயப் படுகிறவர்களல்ல. ஆனால்... உணர்ச்சியே இல்லாத சதைப் பிண்டங்களுமல்ல! உணர்வையும் - அறிவையும் ஒருங்கிணைக்கும் ஆற்றல் பெற்ற பெரியாரின் பிள்ளைகள்! எம்மை வழிநடத்தும் தலைவர்கள் இருக்கிறார்கள், அதனிலும் மேலாக பெரியாரியல் எனும் தத்துவம் இருக்கிறது!

**வே. மதிமாறன்**
**(எழுத்தாளர்)**

பெரியார் தொண்டனை படுகொலை செய்திருக்கிறான் மத வெறியன். மனம் நிலை கொள்ளாமல் அவமானத்தாலும் கோபத்தாலும் துடிக்கிறது.

இந்தப் படுகொலை என்னைப் போன்ற பெரியார் தொண்டன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மட்டுமல்ல, கோடிக்கணக்கான முஸ்லிம்கள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்.

இஸ்லாமிய மக்கள் மீது கொலை வெறி தாக்குதல் நடத்துகிற மதவெறியர்களுக்கு மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் அளிக்கிற படுகொலை.

பெரியார் இயக்கத்தை, தொண்டர்களை மட்டுமல்ல இஸ்லாமிய மக்களையும் நெருக்கடிக்கு உள்ளாக்குகிற திராவிடர் விடுதலை கழக நிர்வாகி கோவை உமர் பாரூக் படுகொலையை வன்மையாகக் கண்டிப்போம்.

## கழக கட்டமைப்புக்கு நன்கொடை

திருச்சி, உய்யகொண்டான் திருமலை, சண்முகா நகர், பணி நிறைவு வனச் சரக அலுவலர் இல. கோவிந்தசாமி கழகக் கட்டமைப்பு நிதியாக ரூ. 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினார். நன்றியுடன் பெறப்பட்டது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

# மாணவர் முத்துகிருட்டிணன் இறுதி ஊர்வலத்தில் கழகத் தலைவர், தோழர்கள்



கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட் உள்ளிட்ட தோழர்கள், டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தற்கொலை செய்ததாகக் கூறப்பட்ட ஆய்வு மாணவர் முத்துகிருட்டிணனின் இல்லம் சென்று அவரது குடும்பத்தாரை சந்தித்து ஆறுதல் கூறினர். மதுரை மக்கள் கண்காணிப்பகத்தின் செயல் இயக்குநர் ஹென்றி திபேன், அவரது குழுவினருடன் வந்து ஆறுதல் கூறினார்.

ஆய்வு மாணவர் சேலம் முத்து கிருட்டிணனன் உடல் 16-3-2017 அன்று காலை 6.00 மணியளவில் சேலம், அரிசிபாளையத்தில் உள்ள அவரது இல்லத்துக்கு கொண்டு வரப்பட்டு மக்களின் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மாவட்ட செயலாளர் டேவிட், மாநகரத் தலைவர் பாலு, செயலாளர் பரமேசு, மூணாங்கரடு சரவணன், நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் திருச்செங்கோடு வைரவேல், ஆத்தூர் மகேந்திரன் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட தோழர்கள் காலை 8.00 மணிக்கே மாணவர் முத்து கிருட்டிணன் இல்லம் வந்துவிட்டனர்.

மதுரை எவிடென்ஸ் கதிர், மக்கள் கண்காணிப்பகம் ஆசீர், விடுதலை சிறுத்தைகள் கட்சி செய்தி தொடர்பாளர் வன்னி அரசு, காங்கிரசு தலைவர் தங்கபாலு, செல்வ பெருந்தகை திமுக மாவட்ட செயலாளர்கள் வீரபாண்டி ராஜா, சிவலிங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு தோழர்கள், காஞ்சி மக்கள் மன்றம் கீதா மற்றும் தோழர்கள், பகுஜன் சமாஜ் கட்சி செய லாளர் வழக்குரைஞர் பார்த்திபன், தலித் விடுதலைக் கட்சித் தலைவர் செங்கோட்டையன், பொது நல மாணவர் இயக்கத் தோழர்கள் வளர்மதி மற்றும் தோழர்கள், வழக்குரைஞர் தமயந்தி, கவின் மலர், எஸ்டிபிஐ, மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.

முன்னதாக பா.ஜ.க.வின் மத்திய துணை அமைச்சர் பொன். இராதா கிருட்டிணன் வந்தபோது கடும் எதிர்ப்பு முழக்கங்கள் எழுப்பப் பட்டன. அவர்மீது தனது இரண்டு காலணிகளையும் வீசியதாக சாலமன் என்ற தோழர் காவல்துறையால் அப்புறப்படுத்தப்பட்டார். கடும் கொந்தளிப்பைக் கண்ட காவல்துறையினர் அமைச்சரின் கார் அங்கேயே இருக்க, அவரை மட்டும் பாதுகாப்பாக அழைத்துச் சென்று பெரும் அசம்பாவிதத்தைத் தவிர்த்தனர்.

இறுதி ஊர்வலம் நண்பகல் 1.00 அளவில் புறப்பட்டு சேலம் செவ்வாய்ப்பேட்டை இடுகாட்டில் 3-00 மணியளவில் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அனைத்து அமைப்புகளின் சார்பாக எவிடென்ஸ் கதிர், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர்.

## சென்னையில் தோழர்கள் சாலை மறியல்



ஃபாரூக் கொலையுண்டார் என்ற செய்தியறிந்து அடுத்த சில மணி நேரங்களிலே சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் குற்றவாளிகளை கைது செய்யக் கோரி அண்ணாசாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். தோழமை அமைப்புகள் மே 17, இளந்தமிழகம், த.பெ.தி.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் விரைந்து வந்து போராட்டத்தில் பங்கேற்றனர்.

“கடவுள் உண்டு என்று கூறும் உரிமை உனக்கு உண்டு என்றால் இல்லை என மறுக்கும் உரிமை எமக்கு உண்டு. கடவுள் இல்லை; கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை” என்று தோழமை அமைப்புகளே உணர்ச்சிகரமாக முழக்கமிட்டனர். பெரியார் சிலை அருகே 30 நிமிடம் சாலைபோக்குவரத்து நின்றது. காவல்துறை 70க்கும் மேற்பட்ட தோழர்களை கைது செய்து இரவு விடுதலை செய்தது. தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன் தலைமையில் மாவட்ட செயலாளர் உமாபதி முன்னிலையில் இந்த மறியல் நடந்தது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 23rd March 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN